# இந்தியாவில் அமைப்பு சாரா பிரிவினர்

## (Unorganized sector in India)

2004-2005 ஆம் ஆண்டில் தேசிய மாதிரி ஆய்வு திட்டத்தின் மூலம் ஆய்வு செய்ததின் படி, அமைப்பு மற்றும் அமைப்பு சாரா பிரிவினர் இருவரும் நாட்டின் மொத்த வேலைவாய்ப்பு 45.9 கோடி பேரில் 2.6 கோடி பேர் அமைப்பை சார்ந்த பிரிவினரும், மீதமுள்ள 43.3 கோடி பேர் அமைப்பு சாரா தொழிலாளர்களாக உள்ளனர். அமைப்புசார பிரிவினர் 43.3 கோடி பேரில், 26.8 கோடி பேர் விவசாய பிரிவினரைச் சேர்ந்தவராகவும், 2.6 கோடி பேர் கட்டுமான வேலையிலும் மற்றும் மீதமுள்ளவர்கள் உற்பத்தி மற்றும் சேவை பிரிவினராகவும் இருக்கின்றனர்.

அமைப்புசாரா வேலையாட்களின் நலன் மற்றும் சமூக பாதுகாப்பை கவனித்துக் கொள்வதற்காக இரண்டு செயல் திட்டம் கையாளப்படுகிறது. அதாவது., சட்ட தொடர்பான அளவுகள், மற்றும் சமூக நலத் திட்டங்கள் மற்றும் செயல்முறைகளை செயல்படுத்துதல். குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி, தொழிலாளர்கள் நஷ்ட ஈட்டு சட்டம் 1923, பேறுகால பயன் சட்டம் 1961, அடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் 1970, மாநிலங்களுக்கிடையே இடம்பெயரும் வேலையாட்களுக்கான (வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் பணியின் கட்டுப்பாடுகள் ) சட்டம் 1979, கட்டிடம் மற்றும் மற்ற கட்டுமான வேலையாட்கள் (வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் பனியின் கட்டுப்பாடுகள் ) சட்டம் 1996 இன்னும் பிற.

அமைப்பு சாரா பிரிவில் இருக்கும் வேலையாட்களின் நலனை உறுதி செய்யும் விதமாக தொழிலாளர் மற்றும் வேலைவாய்பு அமைச்சகம் மற்றவற்றிற்கிடையில் உள்ள பிரிவினரான நெய்பவர்கள், கைத்தறி வேலையாட்கள், மீன்பிடி தொழிலாளர்கள், பனைமர கள் இறக்குபவர்கள், தோல்பதனிடு வேலையாட்கள், தோட்டப்பண்ணை தொழிலாளர்கள், பீடி சுற்றும் தொழிலாளர்களுக்காக அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு சட்டம் 2008 இயற்றப்பட்டது. தேசிய சமூக பாதுகாப்பு வாரியத்தை சட்டம் அமைத்தது, இது சமூக நல பாதுகாப்பு திட்டங்களை அமைக்க பரிந்துரை செய்தது. முக்கியமாக வாழ்க்கை மற்றும் இயலாமை உள்ளடங்கியிருக்கிறது. மருத்துவம் & பேறுகால பயன்கள், முதியோர் பாதுகாப்பு மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்காக அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பயனளிக்கும். இத்திட்டங்களாக செயல்படுத்தப்படுவதற்கு தேசிய சமூக பாதுகாப்பு வாரியத்தை மத்திய அரசாங்கம் அமைத்துள்ளது.